



ஓலை 78 | ஓசை 201 | ஜூலை 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

## பொருள்

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட மிகப் பெரிதாகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# அடி

**பாவகை - வஞ்சித்துறை**

என்னசொல்லி அடியெடுக்க
என்னசொல்லி கவிவடிக்க
எண்ணிலாத கவிப்பொருளாம்
என்னசொல்லி அடியெடுக்க.

மருத்துவமும் போலியாச்சு
மருந்துமிங்கு விசமாச்சு
ஊருக்கோர் பள்ளியாச்சு
அருமையான வியாபாரம்.


பள்ளியிங்கு கடையாச்சி
அள்ளஅள்ள பணமாச்சு
கள்ளுயெலாம் எங்கபோச்சு
ஆளுக்கெலாம் போதையாச்சு

கல்யாணம் கடமையாச்சு
நல்லாவே கடனுமாச்சு
சொல்லாத காதலெலாம்
செல்லாலே பாழாச்சு

அடிமேலே அடிவச்சு
படிப்படியாய் நகர்வாச்சு
பிடிக்காத வாழ்வாச்சு
அடிக்காமல் வலியாச்சு

படிப்பதற்கு கவியாக்க
அடிக்குள்ளே எதைவைக்க
அடியெடுக்க குழப்பமாச்சு
அடிநிறைக்க கவிதையாச்சு

**சந்தம் -**
**காய் காய்**
**காய் காய்**
**காய் காய்**
**காய் காய்**



கவிஞர் உத்தவன். பு. பேச்சிமுத்து, விருதுநகர்

# ஏகாந்த வேளை



அந்தி சாயும் வேளையில அத்த மக காத்திருக்க
ஆசை மச்சானும் வந்து தான் அம்சமாய் நின்னாரே

இன்னிசையாய் கதைகள் பேசி இயலும் இசையும் தந்தாரே
ஈரடிக் குறளாய் வாழ்ந்திடவே வாக்குறுதியும் தந்தாரே

உன்னையே திருமணம் செய்வேன்னு உறுதியாய் நின்னாரே
ஊரறிய இவ தான் பொஞ்சாதின்னு பெருமையாய் சொன்னாரே

என்னையே நானும் மறந்தேன் என்னவனின் அன்பு கண்டு
ஏகாந்த வேளையிலே வஞ்சி நானும் மகிழ்ந்திருந்தேனே

ஐயமும் வந்தது என்னிடத்தே அக்கம் பக்கத்தின் ஏச்சுக்களைக் கண்டு
ஒத்துக்காம வீட்டில் போயிட்டா என்ன பண்றதுன்னு தெரியாம முழிச்சேனே

ஓதினேன் நிதமும் இறைவனிடத்தே ஓய்வின்றி ஓடி வரும் பாசத்துக்கு
ஔடதமாய் என் மச்சானும் வேணுமின்னு வேண்டாத சாமியும் இல்லை

அஃதே திருமணமும் நடந்ததின்று
எஃகு போல எங்களின் உறுதியாலே!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# தூரங்கள் பொருட்டல்லவே



நாளமில்லா சுரப்பிகளுக்கும்
நாளங்கள் முளைக்குதே
நாணங்கள் தோற்குதே
புறமல்லாது அகம் தீண்டி
நுட்பத்தில் நுழைந்து
ஆதி நீட்சியாய்
உள்ளுக்குள்
உயிர் உருகிக் கரைந்திட
மாய வித்தைகள் வேண்டாம்
சிறிதளவு புரிதலும்
கொஞ்சம் காதலுமே
போதுமானதாய் இருக்கிறது.
ஆழ் மனதில் மீள் நிகழ்வாய்
முகிழ்த்திடும் முனைப்புகளுக்கு
தூரங்கள் பொருட்டல்லவே

கவிஞர் அ. ஈஷித் ரேனா, புதுக்கோட்டை

# கவிதைப் பூங்கா

கற்காலத்தில் பிறந்த
அம்மா அங்கலாய்கிறாள்
கணினி காலத்தில் பிறந்த
மகன் கைபேசியில்
கைதானது பற்றி

குழந்தைகள்
வளர்ந்த வீட்டில்
பொம்மை
அனாதைகளாகின்றன



காற்றின் போக்குக்கு
ஆடும் நாணல் மேல்
லாவகமாக நின்றிசைக்கும்
ஊர்குருவிக்கு யார்க்கற்றுக்கொடுத்தது
நேற்றைய பற்றிய கவலையறுத்து
நாளை பற்றிய பயம் துறந்து
இன்றை மட்டும் இலகுவாக
எடுத்து வாழ்ந்திட

பிறர் வயிற்றை
நிரப்ப வேண்டி
தன் வயிற்றில்
யாகம் வளர்க்கும்
விசித்திர முனிவர்கள்
எங்கள் விவசாயி

கைகளில் மருதாணி
வைத்துவிட்டு
சீண்டுகிறான்
சிவந்து தான் போகிறது
கையோடு சேர்த்து
என் காதலும் வெட்கத்தில்

கவிஞர் ரா. சண்முகவள்ளி, ஸ்ரீனிவாசன்

# மணிமேகலை (இருபது)

19. சிறைக்கோட்டம் ஆறக்கோட்டம் ஆக்கிய காதை.
திறமைமிக்க சிற்பி செய்த சித்திரப்பாவை அறம் பேசுவாள்.

மணிமேகலை கரம் பிடிக்காமல் இவ்விடம் விட்டு அகலமாட்டேன்
துணிந்து உதயகுமரன் கூறிய சூளுரை கேட்டாள் சித்திரப்பாவை
பணிவுடன் உரைத்தாள் ,"உன் பேச்சுப் பயனற்றுப் போகும் உணர்க
தணிவுகொள் மகனே , அவளை மறந்துவிட்டு வாழப் பழகு." என்றாள்.

"உன் கடமை செங்கோல் பிறழாது நல்ல அரசனாக நாட்டை ஆள்வது
முன் நிற்கும் கடமைகள் பெரிது அல்லவா காதலை விட, ஆராய்க
தன்கை பாத்திரம் கொண்டு பசிப்பிணி அகற்றும் பணி அவளுக்கு
உன்னதமான மணிமேகலை காதலை மறக்கக் கற்றுக் கொள்வாய்"



அகன்ற இடமுடைய உலகினை இருள் கவ்வியது நிலவற்ற வானம்
பகல் முடிந்து இரவில் காதலர்கள் மீட்டும் மகரவீணை இன்னிசை
நகமும் சதையுமாக பின்னிப் பிணைந்து இமை சொருக யாழிசை
கொல்லன் உலைமூக்கினைப்போல் வெப்பப் பெருமூச்சு விட்டான்.

மன்னன் மனைவி சீர்த்தியுடன் பூஞ்சோலைக்குள் புகுந்தான்
தன்னிகரற்ற மாவலியின் மரபிலே தோன்றியவள் அரசி சீர்த்தி
அன்னப் பறவைகள் விளையாடும் தாமரைத் தடாகத்தின் அழகு
சின்னப் பறவைகள் ''கீச்சிடும் ஒலிகள் நிறைந்த மாலை நேரம்

பூஞ்சோலை பூக்களை ரசித்தபடி மணி மண்டபம் வந்தார்கள்
கொஞ்சி விளையாடும் மான்கள் முயல்கள் கண்டு சொக்கினாள்
வஞ்சி அவள் கண்கள் பொன் வேய்ந்த கூரை பார்த்து மயங்கினாள்
அஞ்சாத மன்னனிடம் சிறைக்காவலர்கள் அவனை வாழ்த்தினர்

"அரசே மாவண் கிள்ளியே நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்
வரம் பெற்றவள் போல் யானைத்தீப் பசியினால் வாடும பெண்
தரம் தெறிந்து நம் வீதியில் திரிந்து கொண்டிருந்தாள் அவள்
அரிய காவலை உடைய சிறைக் கோட்டத்தில் வந்து விட்டாள்

அவள் பிச்சைப் பாத்திரம் ஒன்றை கையில் வைத்திருக்கிறாள்
தவசி போல் பசித்த அனைவருக்கும் உணவு அள்ளித்தருகிறாள்
அவள் கொடுக்க கொடுக்க குறையாமல் பெருகி வருகிறது"
"அவளை உடனே இங்கே அழைத்துவா ?"என்றான் மன்னன்

"நான் ஒரு வித்தியாதர மகள். ஒரு சாபத்தினால் அகலாத பசி
வான் பொய்த்தாலும் உணவு குறையாத அதிசயப் பாத்திரம்
எண் சாண் வயிற்றுப் பசி நீக்கி விமோசனம் தந்த அமுதசுரபி .
மக்களின் உயிர் காக்கும் மருந்தானது இந்தப் பாத்திரம்"

இளங்கொடியே உனக்கு வேண்டியதைக் கேட்டுப் பெற்றுக்கொள்
வளமான அரசே இந்த சிறைக்கோட்டம் கறைப்பட்ட மக்கள்
இளம்பசி இல்லா அறக்கோட்டமாக மாற்ற வேண்டும் மன்னா
உளமாற மணிமேகலை அருளால் சிறைச்சாலை மாறியது .
( இளம்பசி : சிறு பசி )

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# என் முகவரி

என் முகவரி கவிதை எழுதுவது
கவிதையின் முகவரி கற்பனையில் சிந்திப்பது
எழுதுகோலில் முகவரி சிந்தாமல் எழுதுவது
புத்தகத்தின் முகவரி பதிப்பகத்தின் கையில்
தேடலின் முகவரி தொலைத் தூரத்தில்
வண்ணத் தாளின் முகவரி நிறங்களில்
இயற்கையின் முகவரி அதன் அழகில்
கைக்கு முகவரி ஆடாமல் எழுதுவது
கண்ணுக்கு முகவரி மூடாமல் இருப்பது
அமைதியின் முகவரி தியானத்தில் இருப்பது
மௌனத்தின் முகவரி சம்மதம் தெரிவிப்பதில்
புலனத்தின் முகவரி எழுதுவதை படிப்பது
முகவரியை தேடி அலைந்தாலும் அதன்
சுகமே தனித்தான் தேடியவருக்கு தெரியும்
ஏனெனில் நானும் முகவரியை தொலைத்து
நின்று தேடிக் கொண்டே இருக்கிறேன்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# வாகைச்சூடு

நானும் நீயும்
மோதும் களத்தில்
நீயே வெற்றிவாகைசூடு.
பலமுறை களம் கண்டு
பலவெற்றியைப் பார்த்தவன் நான்.
இது உனக்கு முதல்களம்.
இது உனக்கு முதல் வெற்றி.
உன்னிடம் தோற்பது
எனக்குத் தோல்வியேயில்லை.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஆள்வினை உடைமை (அதிகாரம் 62)

அசராமல் காரியம்முடிக்க
ஆயத்தம் செய்திடல்.
அதைச்செய்யத்தக்க பேற்றினை
அயராமை உண்டாக்கும்.

செயல்முடியாமல் இடைவிடுவோரை
உலகம் கைவிடும்.
முயற்றின்மை கைவிடலே
வெற்றிக்கு வித்தாகும்.

பிறர்க்குதவல் பேருவகை
ஈடில்லா மேநிலைமை.
விடாமுயற்சி இதைச்சொல்லும்
கொடைப்பண்பது வெல்லும்.

போர்க்கஞ்சும் பேடியின்கைவாள்
பேராண்மை கொள்ளாதுபோல்.
முயற்சியில்லா பேர்களும்
பேடித்தன்மை கொண்டோரே.

தன்னுவகை விரும்பாது
தானேற்ற செயல்முடிப்போன்.
முன்னிற்போரின் பிணிநீக்கி
தாங்கும் தூணாவான்.

அயராமுயற்சி ஒருவனுக்கு
அளப்பரிய செல்வமீயும்.
அயர்ந்த முயலாமை
அளவிலா வறுமைதரும்.

கரிநிறைந்த மூதேவி
சோர்ந்தோன் உடலிலும்.
அருள்நிறைந்தத் திருமகள்
முயல்வோனிலும் வாழ்கிறாள்.



ஆள்வினை உடைமை

ஊழ்வினையால் நன்மையற்றிருத்தல்
ஒருவர்க்கு பெரும்பழியன்று.
முயற்றின்மைதரும் அறியாமையே
பெரும்பழியாய்க் கொள்ளப்படும்.

இறையால் செய்யவியலா
காரியம் என்றாயினும்
உடல்வருத்தும் முயற்சியின்
கூலியாய் வெற்றிகிட்டும்.

அசராத தொடர்முயற்சி
செயல்முடிக்க இடைஞ்சலாகும்.
விதியறுத்து ஒருநாளதை
தோல்விகொண்டு ஓடச்செய்யும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா . நாகர்கோவில்

# நிழலும் நானாகி நித்தமும் தொடர்வேனே



மொட்டான மங்கையே
மனதில் மலர்ந்தாயே
நறுமணம் தந்தாயே
நானும் சுவாசிக்கவே

மதியின் ஒளியானவளே
இதயத்தில் ஒளிர்கிறாயே
காதல் காரிகையே
தூரிகை ஓவியமே

மயிலிறகின் மென்மையே
அணைத்திட இனிமையே
கொழுகொம்பாய்ப் படர்கிறாயே
இளந்தென்றலாய்த் தழுவுகிறாயே

என்னுயிரில் கலந்தே
உணர்வினில் உறைந்தாயே
முப்பொழுதும் கனவினில்
முத்திரை பதிக்கிறாயே

கன்னத்தில் ஈரமது
கன்னியின் இதழாலே
நெருங்கி வந்திடாயோ
அன்பைத் தந்திடாயோ

எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்
ஏகாந்தமது விலகிடாதோ
புன்னகையில் புதைந்தே
புத்துணர்வு அடைகிறேனே

சாரல்மழையாய் பொழிந்திடு
நெஞ்சமதை நனைத்திடு
நினைவுகளில் கரைகிறேன்
நினைவலையாய் எழுகிறேன்

கற்பனையும் நிறைவேறிட
நீயும் வந்திடுவாயே
நிழலும் நானாகி
நித்தமும் தொடர்வேன்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# துன்பம் ஒரு போதிமரம்

காலம் நடத்தும் கல்வியிது
கற்றே ஆக வேண்டிய பாடமிது

வேண்டாம் என்று
ஓடினாலும்
விடாது வந்து உரைத்திடுமே

அவதூறுகளால்
அழகாக்கும்
பழிப்புரைகளால்
பக்குவமாக்கும்



புதிய பாதை
கிடைக்கும் வரை
கதிரையில் நாமும்
அமரும் வரை

காலம் நடத்தும்
கல்வியிலே கலங்காது
பலரை அறிந்திடுவோம்

துரோகத்தின்
வலிகளை
உணர வைக்கும்
மரமாக நம்மை அலைய வைக்கும்

அத்தனையும்
அழகாக மொழிவதனால்
அல்லல்படுத்தும்
துன்பமுமே துணிந்து சொல்வேன்
போதிமரமே

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# தயக்கத்தை தொலைப்பவர்கள்

ஏதோ ஒரு தயக்கம்
எப்போதும் நிறைந்திருக்கிறது
எல்லோருக்குள்ளும்.



சுயமாய் புரிந்து கொண்டு
யோசிக்கத் தொடங்குகையில்.
வளர்ந்த சூழலும்,
வளர்க்கப்பட்ட விதமும்
காரணமாக இருப்பதை
கண்டறிய முடிகிறது.

தயக்கம் சூழும் பொழுதுகளில்
வாய்ப்புகளும், இழப்புகளும்
தள்ளியபடியே எதிர்ப்படுவதை
உணர்ந்து தரிசிக்க முடிகிறது.
.
நமக்கான குரலில் பேச
நம்மைத் தவிர
வேறு யாரும் இல்லை இவ்வுலகத்தில்
என்பதனை தயக்கத்தில்
தத்தளித்த நாட்களே புரிய வைக்கிறது

தயக்கத்தை உடைக்க
குரலை ஆயுதமாக்கி நிற்கையில்
இழப்புகள் மறைந்து,
நிலவரத்தை கலவரமின்றி
சமாளிக்க இயல்வதையும்
ஏமாற்றங்களும், அவமானங்களும்
விலகி மறைவதையும்,
பேச்சு கூர்மையுற்று
விலகும் மனிதர்களைப் பற்றி
கவலைப்படாதிருப்பதையும்
கண்கூடாகக் காண முடிகிறது

தயக்கமின்றி நம்பிக்கையின் கீற்றுகளை
கண்ணில் சுமந்தபடி எதிர்ப்படுபவர்களே
வாழ்வை வண்ணமயமாக்க
போதுமானவர்களாக இருக்கிறார்கள்.

கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# கொடுங்கோன்மை

பசிப்பிணி போக்கும் உழவன்
பட்டினிப்போரில் இறங்க
பாதை வகுத்த பேயாட்சி.
உழவன் கண்ணீர் குடித்த அரசு
உருக்குலைந்து போகும்.
உழைப்பாளர் குருதி உறிஞ்சும்
கொடியோர் செருக்கு வீழும்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# மன்னவனே

தன் மன்னவள்
அவள் மனதை
மந்திர காதல்
கடலில் மூழ்கடித்து
அன்பென்னும்
முத்தெடுக்கும்
மாந்தன் அவன்
எவனோ அவனே
மன்னவன்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# விழி! எழு!

வாழ்க்கையில் போராட
வலிமையே துணையாம்.
சுரவரிசைகளால் எழும்
இன்னிசையே சிறப்பு.
வாழ்வில் இனிமையை
நோக்கங்களே நல்கும்.

தொண்டைக் குறிக்கோளாக்கி
தொடர்க பயணத்தை!
வீடு முன்னேற
நாடு முன்னேறும்.
வீழும் அழுகியகனியே
விரைந்தே வேர்விடும்.



தாழ்நிலையில் கிளம்பும்
வாழ்நாள் சிறக்கும்.
விழுந்தால் எழுந்திரு
வீறு கொண்டிடு.
உங்களின் ஆற்றலை
உவந்தே வளர்த்திடு.


இன்னலைக் கண்டு
இடிந்து போகாதே.
இடருக்கு இடர்கொடு
இன்பத்தில் திளைத்திடு.
ஆக்கம் பெருகிட
ஆசையாய் ஈந்திடு.

ஆணவத்தை விட்டொழி
அன்பைக் கொடுத்திடு
ஆரவாரம் இல்லாமல்
அருளோடு உதவிடு
இதுவும் கடந்திடும்
இருப்பதில் களித்திடு.

விழிப்போடு இருந்தால்
விரையும் முன்னேற்றம்.
இலக்கை நோக்கியே
இயல்பாய் நகர்ந்திடு.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

மேவும் வரையில்
தெரியவில்லை
காலமும் மழையும் .
□
கலையாகப் பார்த்தேன்
அழகானது
சிலை.
□
படி ஏறுகையில்
தலைச் சுமை மறந்தேன்
வீட்டில் அடுப்பு எரிகிறது.
□
ஆற்றில் நீராட
பாதத்தில் இருந்து
தலை வழி வெளியேறும் உஷ்ணம்.
□
மிதக்கும் காகித கப்பல்
சற்று திரும்பிய
சிறு பருவம்.



கவிஞர் மு. மணி திரு முருகன்

# மனவலியின் மிகையில்



சிறு வேதனை எனினும்
மனதளவில்
பாறாங்கல்லெனவே கனக்கிறது

பாதை வழி சாதாரணமாக
பயணம் முடியாதிருக்கிறது

புன்னகைகள் தூரம் போய்
ஒளித்துக் கொண்டன

வார்த்தைகள் கோர்வையற்று
விட்டேத்தியூர்வலம் செல்கின்றன

முகிழ் மகிழ்ச்சி ஸ்தம்பிக்க
மலர்ச்சி தொலைக்கிறது முகம்

பதில் மட்டும் உரைத்து
மூடிக்கொள்ளும் இதழ்கள்

கேள்விகளை விளங்கிக்கொள்ள
மூளை கனநேரம் எடுத்துக் கொள்கிறது

சிறு பிழை தானெனினும்
தீர விசாரிக்காத முடிவுகள்

தலைவிரி கோலமாக
கேவலச்சிரிப்பை உருவாக்கும்
அந்நியச்சூழல்

அதுவே அந்திமமாகும்
உறவின் தழலாய்ப் புகையும்

மனவலியின் மிகையில்
மனவலிமை தோற்றொழிந்து கிடக்கிறது.

விடு,
கொஞ்ச காலம் கடந்து போகட்டும்

புறக்கணிப்பின் உச்சத்தில்
குடியிருக்கும்
வெற்றியின் மச்சங்கள்
நீ யாரெனப் பறைகையில்
இவ்வுலகம் உணரும்!

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர்

# மனிதம் எனும் புதினம்

நிறத்தால் வேறுபட்டு அன்பால் இணைந்தது
நிழலுலகின் உன்னத நிஜம் மரணமற்ற மனிதநேயம்
சீரிப்பாய்ந்த உவரியின் சீற்றத்தில் கண்டேன்
பொங்கியெழுந்த மனிதம் எனும் மனிதநேயத்தை
திக்கற்று திசையறியா தரணியெங்கும் ஓலமிட
இல்லாநிலையில் இருந்ததை பகிர்வதில் கண்டேன்
கட்டியணைத்த தாயுடன் சேயின் உயிரற்ற உடல்களும்
தன் வாரிசு தலைக்கவே தோல்க்கொடுத்து
உயிர்நீத்த தந்தையோ மரத்தை அரவணைத்து
மரணித்த அன்பிலும் கண்டேன்
ஊரறியா உலகறியா மொழியற்ற உயிர்களுக்கும்
வலிதாங்கி வழிகாட்டிய அன்பிலும் கண்டேன்
பரிதவித்த பூவிதழ் சிந்திய புன்னகையிலும் கண்டேன்
மனிதனுக்குள் இன்னும் மறையாது வாழ்ந்து கொண்டிருக்கும்
இறப்பின்றிய மனிதம் எனும் புதினத்தை.



கவிஞர் ஷியாஸ்னா பைஸல், நாவலப்பிட்டி (இலங்கை)

# அலட்சியக் காதல்


அன்று,
நானாக நான் இருந்தேன்
நீ வந்தாய்
நான் நீயாக மாறினேன்.

இன்று,
நானாக நான் இல்லை
நீ சென்றாய்
நான் வெறுமையாக மாறினேன்.



கவிஞர் ஜெ. சுரேகா, திண்டுக்கல்

# ஓவியம்



கலைத்தாயின்
தலைப்பிள்ளை

தூரிகை சீண்டலால்
துயில் கலையும்
கலைமகள்

வண்ணங்களின் ஊடலால் பிறப்பெடுத்த
அதிசயப்பிறவி

மொத்தத்தில்

’அ ’என்ற சொல் முதல் அனைத்திற்கும் உயிர் தந்து
பாவலன் கற்பனைக்கோர் பாங்கான உருத்தந்து
உள்ளத்து எண்ணத்தை வண்ணத்திலே தந்து
கடவுளையும் படைக்கின்ற கணகற்ற திறன் தந்து
ஓர் கலைஞனின் கொலுவிருக்கும் கடவுளே ஓவியமாம்.

கவிஞர் அ. தனசேகரன், அருளவாடி (விழுப்புரம் மாவட்டம்)

# என் அவள்

பெண்ணே உன் மைவிழி ஓரத்தில்
மை துளிகளின் பாதயாத்திரை

உன் நெற்றியில் சந்தன கீற்று
குங்குமத்தின் கோபத்தில் வியர்வை துளியாய்

உன் உதடுகள் உச்சரிக்கும் சொற்கள்
புதிய அகராதியின் வரிகளாய்

உன் தலைமுடியில் குடியிருக்கும்
மல்லிகை பூ அகங்காரத்தின் உச்சியில்

உன் அழகிய முகம் கண்டு ரோஜா மலர்கள்
தினந்தோறும் தற்கொலை முயற்சியில்



உன் சிரிப்பின் நிறம் கண்டு
வானவில் வெட்கத்தின் தோரணமாய்

உன் பாதங்களின் கொலுசு ஒலியில்
இசை குறிப்புகள் ஊமையாய்

பெண்ணே மொத்தத்தில் என் காதல்
வறுமைக்கு நீ காமத்தின் சாரல்களாய்.

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

கோவில் ஆலமரம்
ஊஞ்சலாடும் சிறுவர்களுடன் சேர்ந்தாடும்
மரப்பாச்சி தொட்டில் பொம்மை!



கவிஞர் லா. பெனீஸ் தமிழ் மருத்துவர் நெல்லை

தற்போது மருத்துவர், "இனி மருத்துவம் செய்வதில் எந்தப் பயனும் இல்லை. இல்லத்திற்குக் கூட்டிக் கொண்டு இறுதி வரை பார்த்துக் கொள்ளுங்கள்"; என்று என் பாட்டனாரின் இறுதி நாட்களில் சொல்லிவிட்டார்கள். ஒரிரு நாட்களில் அவர் வாழ்வும் முடிந்தது.

பல வயதானவர்கள்,தம் மனத்தளவிலும், உடல் அளவிலும சிறிது சிறிதாக மரணத்தை நோக்கி நகருகிறார்கள்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பல நோயாளிகள் மருத்துவத்திற்கு வழியின்றி,இறுதி நாளை எதிர்பார்த்து, துன்பத்திலும் வலியிலும் உழலும் அவலம்.

பாலின நோயால் பாதிக்கப்பட்டு உறறோரால் கைவிடப் பட்டவர்கள்..மன நோயால் பீடிக்கப்பட்டு, உறவினரால் மறக்கப்பட்டு நாதியற்றவர்கள். இப்படியாக இவ்வுலகில் வேண்டா வாழ்வை விரும்பாமல் சுமக்கும் ஆதரவற்றோர் அநேகம். இந்த துன்ப இயல் வாழ்விற்கு நம் சமூகம் என்ன பதில் வைத்து இருக்கிறது?




கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# ஆசை அணை போட

அவன் ;
மல்லிகை பூ மணக்க
மனசெல்லாம் தேன் மணக்க
எல்லையில போறவளே
என் இதயத்தை என்ன செஞ்ச



அவள் :
என் வீட்டு மாமரமே
என் கொடத்து தண்ணீரே
நீ கொடுத்த முத்தத்தை
திருப்பித் தர்றேன் சம்மதமா

அவன் ;
கோடையில கொதிக்கின்ற
குளிர் பஞ்சு தேவதையே
ஓடையிலே யாரும் இல்ல
ஓடிவா நான் மகிழ

அவள் ;
நான் உடுத்தும் ஆடையில
நடுவில் நிக்கும் நாயகனே
சாவடியை தாண்டித்தான்
நான் வரணும் சனம் பார்க்க

அவன் ;
வெளஞ்ச நெல்ல போலிருக்கும்
விளக்கு வைக்கும் தேவதையே
களை எடுக்க காட்டுக்கு
காத்தால வந்தால் என்ன

அவள் ;
மழைக்கு நா ஒதுங்கும்
பள்ளிக்கூடத் திண்ணையில
படுத்து இருக்கும் நாய் கூட
கத்திக்கிட்டு ஓடி வரும்

அவன் ;
என் உசுர வச்சிக்கிட்டு
இப்படி நீ துடிக்கிறயே
கண்ணுக்குள்ள எப்பவுமே
நீ வந்து கொல்லுறயே

அவள்;
ஒம் முகத்தை பார்த்தாலே
ஒடஞ்சு போன வெள்ளமாவேன்
என்னால நீ துடிக்க
இஷ்டம் இல்ல மனசுக்குள்ள

அவன்;
நான் கொடுத்த முத்தம் எல்லாம்
நளினமே நீ வச்சுக்கோ
நீ வந்து தந்தாலும் உனக்குத்தான்
திரும்ப வரும் எல்லாமே.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்கபுரம்

உனக்காக நான் கண்ட கனவுகள் எத்தனை
ஆனால் உன்னில் நான் படித்த பாடங்கள்
எத்தனை ஏராளம்
எளிதில் பல்கலை எனலாம்
அது முதலில் என்னை பக்குவப்படுத்திய கலை வாசல்
அவ்வளவு எளிதில் கடந்து
செல்ல முடியா படிப்பினை!

ஏட்டறிவை ஏணியாக கொண்ட ஏழ்மை
பட்டறிவு பதிவு செய்த ஒவ்வொரு தருணங்களும்
நான் குடும்பம் சார்ந்த
நம்பிக்கை கொண்ட பிடிப்பை தளராது
தொடர் கதையாக உணர்த்த
அந்த மாணவ விடுதி வாழ்க்கை போதும்.

கையில் காசு இல்லை என்று
தந்தையிடம் சொல்ல வாய் புளிக்கும்.
வீட்டின் சூழல் மனநினைவில்
கண்முன் வந்து செல்லும்.
தானே சுயதொழில் புரிய நலன் தேடி,
வீண் பேச்சும் விழும்.

"வளர்த்த மாடு கொம்பில் பாயுது"
என்றாலும் அடுத்த நொடி அதை மறந்து,
தனிமை தாகம் தீர்க்க மனம்
மைதானம் விரையும்.

அது வேறு உலகம்
உடல் களைக்க உப்பில் நனைய அவ்வளவு ஆசை.
முடி(ஆ)மை க்கு முற்றுப்புள்ளி வைத்து
முயற்சிக்கு வளம் சேர்த்த இடம் அது.
வாழ்வின் ஓட்டப்பந்தயத்தில் ஓட
பயிற்சி தந்த நனவின் பட்டறை.



அன்பினிய ஆவலில் அழகு இரசணை
தேடும் கனவு
உணர்வின் மொழி பேசும் உறவு
உல்லாசிக்க முன்பு,

சுயம் உணர்ந்த புலமை தான் உயர
இன்று பல்கலையில்
இத்தனையும் கடந்து.

கவிஞர் வியாத்தன். சி. லக்ஷ்மன்

# அவளது ஆடை

அன்று அவள்
அழகான ஆடை அணிந்திருந்தாள்.
அந்த ஆடை அவளுக்கென
அளவெடுத்து நெய்ததாக இருந்தது.
அந்த சின்னஞ்சிறு தூறல்
அவளை நனைத்த பின்பு
அழகிழந்து போனாள்.
அவள் அலங்கோலமாகிப் போனாள்
அருவெறுப்பாகிப் போனாள்.
சில கண்களுக்கு
அவள் ஆபாசமாகிப் போனாள்.



கவிஞர் தனுசன்

# காதில் புரளும் காதல் புரளி

காதலடி நானே
கண்ணிமையில் பொத்திக் காப்பேனடி



காதலில் கணக்கு ஆகாதடி
கனவுலகம் அலுக்காதடி

மொழிக் கூறியும் முன்
முறைக்கும் விழிக் கூறுவதை
காதல் கொண்ட எவரும் சொல்வாரடி

ஐயமுற்று அரற்றாதடி
அஞ்சாமல் எனை நோகடிக்காது நோக்கடி

ஐயமின்றி மொழியம்பு எய்தேனடி
பசப்பு மொழியுமல்ல நீ மகுடிக்கு
ஆடும் அரவமுமல்ல

சுழல் பாதையில்
பதைபதைக்கும் படகிலோர்
துடுப்பதுவாம் எம் கூற்றென
நம்பிடு எம் மொழியாளே!

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# சுதந்திரம் வேண்டும்

இன்னும்.
விடுதலை கிடைக்கவில்லை.
பெண்ணுக்கு அல்ல.
ஜோசியக்காரன்
கைகளில் இருக்கும்
கிளிக்கு.



கவிஞர் அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை

# புகை மனிதனின் பகை

புலர் காலை கோபம்
புதைய மறுக்கும் சோகம்
புற்றில் உள்ள நாகம்
புத்தியில் படிந்த காமம்
ஆபத்து
அது ஆபத்து




அவற்றின் தோழனே
புலனுடம்பில் புகும் புகை
ஆபத்து
அது பேராபத்து

ஏனிந்த பண்பு?
எதற்கு தீர்வு இந்த நஞ்சு?
கேட்டால் கதைப்பர் :

"மனசு மானாக
மண்டைக்குள் லேசாக
அழுத்தம் ஆவியாக
அளவளாவி நட்பாக"

நோய்க்கு திட்டம் போட்டு
நோகாமல் அதை அடையும்
நோக்கம் இதுவோ?

நோஞ்சான் தீஞ்சான் என்றேதான்
நுரையீரல் சாபம் விடும்
பழக்கம் இதுவோ?

நகை தரித்த பண்பினான்
சிகை வியர்த்த உழைப்பினான்
தொகை தொகுக்கும் இயல்பினான்
வகை வகையாய்
வாகை சூடும் வழக்கத்தினான்

அவன்
புகை ஒறுத்த மாந்தன் ஆவான்.

கவிஞர் சித்தரேசன், துறையூர்

# மனித குணத்தின் ஓர் பகுதி

மறைந்து கொண்டிருக்கும் ஆயுளை
பற்றி பிடித்துக் கொண்டு
வாழ்வில் நீ பெரியவனா
இல்லை நான் பெரியவனா என்று
போட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறான் மனிதன்
குரங்கிலிருந்து மனிதன் உருவானது
இந்த விடயத்தில் ஒப்பாகி செல்கிறது
மனிதன் ஆறறிவு பெற்ற பின்னும்
நீயா நானா எனும் வாதம் நிற்கவில்லை
பாகுபாடு குறையவில்லை
ஏற்றத்தாழ்வு மாறவில்லை
பல்லாயிரம் கண்டுபிடிப்புகளில் மனிதன் மலர்ந்தாலும்
அடிப்படை குணங்களிலிருந்து இன்னும் மீளவில்லை



கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம்

# தாலாட்டு

(ஆராரோ.... ஆரிராரோ.... ராரி... ராரி ராரிராரோ... )

தெவிட்டாத திரவியமோ, தித்திக்கும் தீஞ்சுவையோ
தெளிந்த நல்தேனோ, பசும்பாலோ
பாகில் ஊறிய பலாச்சுளையோ
அமிழ்தூறும் அட்சயப் பாத்திரமோ ( ஆராரோ



திங்கள் இளம் பிறையோ
சித்திரை வளர் பிறையோ
காலை இளங் கதிரோ
மாலைப் பொன் கதிரோ ( ஆராரோ

மழலை வாய் மொழியோ
மார்கழிக் குளிரோ, பூசணிப் பூவோ
பூவரசம் இலையோ, பூத்த நல்கொடியோ
வேரோடும் அருகோ, நாரில் தொடுத்த மாலையோ ( ஆராரோ

ஆண்டாள் அருளிய திருப்பாவையோ
திருமுறைகள் கண்ட தேவாரமோ,
உருக வைக்கும் திருவாசகமோ,
உலகை ஆளும் திருக்குறளோ ( ஆராரோ

இனிக்கும் இசையோ, இயக்கும் இயலோ
நனிநல் நாடகமோ , நால்திசைக் காவலனோ
முத்தமிழ் ஆழியில் விளைந்த நல்முத்தே
மூத்தோர் வழியில் நலமுடன் வாழ்வாயே ( ஆராரோ

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜ், பட்டாபிராம், சென்னை

# கண்ணீர் துளிகள்

துன்பம் வரும் வேலையில்
துயர் துடைக்க யாருமில்லை
துணையானது நீயே
துணிவு தருவது நீயே

விம்மி விம்மி அழுகையில்
விடியலும் நீளுதே
விழித்திரையும் வீங்குதே

சோகம் வந்த வேலையில்
சொந்தம் ஒன்று கூடலையே
சொல்லி அழும் போதினிலும்
சொர்க்கமாய் அது தோனலையே



கவிஞர் பரிமளா மணி, தியத்தலாவ (இலங்கை)

# நான்கு

நான்கு பேரு வேண்டுமே பிறக்கையிலும்,
நான்கு பேரு வேண்டுமே இறக்கையிலும்,
நான்கு பேரு ஏசுவதற்கும்,
நான்கு பேரு தூற்றுவதற்கும்,

நான்கு பேரு பாராட்டவதற்கும்,
நான்கு பேரு சொல்வதற்கும்,
நான்கு பேரு தூக்கிவிடவும்,
நான்கு பேரு சாட்டிபேசவும்,

நான்கு பேரு நான்கு பேரா 400 மில்லியன் பேரானாலும்,
நம் வாழ்க்கை நம் கையில்தான்,
நம் பசிக்கும் உணவும்,
நம் வலிக்கு மருந்தும்,

நம் வேண்டுதலுக்கு பிரார்த்தனையும்,
நம் தேவைக்கு அலைவதும்,
நம் விதியை அனுபவிப்பதும்,
நம் தவறுக்கு தண்டனையும்,

நம் ஓய்வுக்கு தூக்கமும்,
நம் சாதனைக்கு சோதனையும்,
நமக்கு நாம் மட்டுமே,
நான்கு பேரால்,
நாலுவிதமாக பேசமட்டுமே தெரியும்,

நமக்கானவற்றை நாமே ,
நல்லதோ,கேட்டதோ நாமே ,
நல்வாழ்க்கை வாழ்வதும் நம்கையிலே,
நாசமாகி நலிவதும் நம் கையிலே!

நான்கு பேரை பற்றி நினையாமல்,
நாலாவிதமும் சிந்தித்து செயல்படுவோமே!

*கவிஞர் நீலாசுபாஷ் ஆக்சேடர்*

தான் பிறந்து வளர்ந்தது முதல் இன்று வரை
தான் துள்ளிக் குதித்து வலசைப் போகும் வழியில்
ஒரு நாள் கண்ணி வைப்பார்கள் என்று
அந்த முயல் நம்பவேயில்லை
/
பூமி சூரியனைச் சுற்றி
நீள் வட்டப் பாதையில் வருவது போல்
நானும்
எனது மீள் நினைவு வட்டப் பாதையில்
உன்னையேச் சுற்றுகிறேன்,
/
சிறிது நேரம் காந்தத்தோடு இருந்த அந்த இரும்பு
காந்தத் தன்மையைப் பெற்று விட்டது
சிறிது காலம் உன்னைப் பற்றி நினைவுகளில் இருந்த நானும்
காதல் தன்மையைப் பெற்று விட்டேன்,
/
கேதோடு ஆனோடுகளைப் பயன்படுத்தி
மின்முலாம் பூசப்படுவதுப் போல
உன்னையும்,என்னையும் பயன்படுத்தி
காதல் முலாம் பூசப்படுகிறது,
/
இலைகள் உதிர்ந்த மரம் தான்
ஆனால்
இன்னும் விதைகளை தாங்கிக் கொண்டு நிற்கிறது.
/
தேவதை, மரவெட்டி கதையில்
இன்றைய சூழலுக்கு
கதைச் சொல்ல வேண்டுமானால்
முதலில் இரும்புக் கோடாரி,
பின்பு வெள்ளிக் கோடாரி,
கடைசியாக தங்கக் கோடாரி என
மாற்ற வேண்டியது இருக்கும்,

கவிஞர் இரா. மதிராஜ்

# குழந்தையோடு குழந்தையாய்

கிள்ளையின் கொஞ்சு மொழி
சிதறும் வெள்ளிக் காசாய்
ஒலிக்கும் கொள்ளை சிரிப்பு!
பிஞ்சுக்கைகளால் மெத்தென்று
அணைக்கும் மேனி!
தத்தித்தத்தி நடக்கையில்
தள்ளாடும் நம் மனது!
கல்மிஷமில்லா வெள்ளை உள்ளத்தோடு
பழகும் தன்மை!
கைக்கு அடங்காத காற்று போல
குதித்தோடும் காட்டாற்று
வெள்ளத்திற்கு ஒப்பான வேகம்!
வேண்டும் வரம் கிடைத்தால்
மீண்டும் மழலையோடு மழலையாய்
மாறிட ஆசை!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# இப்போதெல்லாம் அப்படித்தான்

இப்போதெல்லாம் அப்படித்தான்.
ஈடுபாடில்லை

பிடிப்பும் இல்லை, எனக்காக ஒன்றை வலிந்து
கேட்பதை நிறுத்துவிட்டேன்

அது எவ்வளவு பிடித்தமானாலும் சரியே!
இப்போதெல்லாம் அப்படித்தான்

நான் சரியாக இருப்பதில் ஒரு பெருமிதம்
எனக்கு! எந்த எதிர்பார்ப்பும் இன்றிய பெருமிதம்



அவ்வப்போது பழைய வடுக்கல்
கண்ணீரால் உராய்ஞ்சப்பட்டு எரிகிறது

பரவாயில்லை சுதாகரிக் கொள்கிறேன்

ஒரே ஒரு வேண்டுகோள்
நான் அப்படியேதான் இருக்கிறேன் நாவில்

இனிப்பில்லை என்றாலும்
உப்பை என்மீது கொப்பளிக்காதீர் !

கவிஞர் முஜீபா

வெயிலுண்ட வானமொன்று
வெட்டவெளி பொட்டலொன்றில்
மனமுவந்து மழை கொடுத்து
மரக்குடை செய்கின்றது!

எதிர் காற்று வீசியடிக்க
பூவொன்று இதழுதிர்க்க
கம்பீரம் குறையாமல்
காம்பதுவும் நிற்கின்றது!



இறகுகளில் உயிர் விதைத்து
பறவைதன் கனம் பொருத்து
தூசு பட்ட தென்றல் அதை
மாசு நீக்கிச் செல்கின்றது!

வெளிச்சமது திரை போட
வெண்ணிலவும் நடை போட
பகலுரித்த இரவுப் போர்வையில்
பூவுலகம் புதைகின்றது!

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தந்தை

ஊர் சொல்லும் வைத்தியர் இல்லை.
ஊடகங்கள் போற்றும் உலக அளவு பிரபலம் இல்லை.
என்றாலும் மாறுதட்டும் வீரன்
(எந்தன்) தந்தையின் நாமத்தில் உண்டு.

உன் கை விரல் பிடிக்க நான் என்ன தவம் செய்தனோ

கவலைகளை வெளியில் காட்டியதில்லை.
பிள்ளைகளை கவனிராமல் இருந்தது இல்லை.

என்றாலும் கட்டாயமாய் செய்யும் கடமைகளை எல்லாம்
கச்சிதமாய் செய்ய மறந்ததே இல்லை.

யார் செய்த தவமோ நான் உன் மகளாக பிறக்க
உம் கரம் பற்றும் போதெல்லாம் உம் உள்ளங்கை
கீறல்கள் சொல்லும் எம்மீதான பாசத்தின் அளவை

அப்பா என்றாலே அமிர்தம்தானே
அப்பா என்றாலே வீரம்தானே
அப்பா என்றாலே வெளிச்சம்தானே



ஆகாயம் கூட தலைசாயும் என் தந்தை
தலை நிமிர்ந்து பார்த்தால் அவ்வளவு கம்பீரம்

எத்தனையோ உறவுகள் இம்மண்ணில் இருந்தாலும்
அத்தனைக்கும் உசத்தி என் தந்தைதானே

உம்மை கௌரவிக்க நாம் காத்திருக்கிறோம்
காலமே விடைக்கொடு
இறைவா உடல் நலத்தை காத்துவிடு

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# என்றும் பதினாறு

நினைவுத்தூளியின்
ஆட்டம் நித்தமும் தொடர்கிறது
அதோ ஆலயமணியின்
ஓசையில் விடியலுக்கு
வரவேற்பு புள்ளியால் பூக்கள்

வரைந்த ஞாபகங்கள்
விடியலை ரசித்து குளிரைத்
துடைத்து கலகலத்த
நகைப்பொலியின் சிதறல்
அடுக்கிய வளையொலிகள்
சினுங்கி கொஞ்சிடும்

பாதக்கொலுசின் சத்தம்
உற்சாகத்தில் ஊரைக்கூட்டும்
ஏய் குயிலென்ற அவனின்
அழைப்பில் இதயம்
முட்டி மோதி படபடக்கும்

உன்னை கண் தேடுதே உறங்காமலே
விலகாத பார்வையொன்று
கவ்விக் கொண்ட அழகில்
தோழிகளின் கேலியும் கிண்டலும்
சூழ்ந்திடும் வேளையில் மனமொரு புறம்

ஆகாத ஊருக்கு வழியாடி பெண்ணே!
என எகத்தாளம் பேசியது
இரட்டையழகு பெட்டகம்
இரசித்து சென்றது



இலக்கியம் பேசும் விழித்தூறலை
நிறுத்தேன் என்ற அதட்டலும்
முதல் துளிரின் ரகசிய நினைவில்
கண்மலர்ந்த நாட்கள்

சற்றே வேகச்சிரிப்பில்
அவளவன் என்னவென்ற
கண்ணசைவிலே
அவனின் அவள்
உன் நினைவுத் துளியிலே

தொடர்கின்ற பந்தத்தில்
சிக்கிக் கொண்டேன் கண்ணாளானே
கைப்பற்றியதால் நினைவுகளை
இரசித்து ரசிக்கிறேன்

கவிஞர் கனகசுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி

# அகதியாய் நான்

கட்டிய மூட்டைகளோடு
கால்கடுக்க நடந்துபோகும்
கனத்த மனத்துடையாரைக் கண்டதும்
கலங்கிக் கண்ணீரைச்சொரிந்து கொண்டிருக்கிறது .

நஞ்சையும் புஞ்சையுமாய்
நிறைந்து காட்சியளித்த
அதே இடமின்று
கருகிச் சாம்பலாகிப்
பாலையாய் தணலை வெளிப்படுத்துகிறது

நிம்மதியாய் படுத்துறங்கிய
வீடுகூட சவக்குழியாய்
அச்சத்தைத் தந்துக்கொண்டிருகிறது
மீண்டு வருவதா மீண்டும் வருவதா
எதுவாகிலும்
உள்ளுக்குள் நிலையற்ற நாணல்கற்றைகளாக
அலைந்து அலமந்து கொண்டு இருக்கிறது

திரும்பும் திசையெங்கும்
அம்மா எனும் பெருங்குரல்
எழுந்து அடங்குகையில்
இதயம் நின்று துடிக்கிறது

அடுத்தநாட்டிலாவது அமைதிகிடைக்கட்டுமென
அள்ளிப்போகும் விமான ஊர்த்திகளுக்குள்
உதிர்ந்து விழும் கண்ணீர்கூட
என் கண்ணீர் தேசமாய் விழுந்து
விரிகிறது

கனவாகவே போய்விடுமோ
என்ற என் கனத்த நெஞ்சின்
கேள்விகள் மட்டும்
தேவையற்ற களையாய்
எல்லா இடங்களிலும் பரவி நிற்கிறது

ஆற்றுப்படுத்துவார் யாருமின்றி
மீண்டு(ம்) ஒருநாள் வாராதோ
ஏக்கமாய் தவித்தடங்குகிறது
என்மூச்சுக்காற்று
ஓர் மூலையில் நான்.



கவிஞர் நீரஜா

# புத்தகம்

படிக்க, படிக்க தானே அறிவு வளருமே!
படித்தால் தானே ஒரு மனிதன் முழு மனிதனாகிறான்.
உண்பதும் உறங்குவதும் மட்டுமே வாழ்க்கை அல்லவே!
கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக ,
கற்ற கல்வியை பயன்படும் வகையில் நடக்க வேண்டுமே!
உலகப் பொதுமறையாம்
வள்ளுவப் பெருமானின் அற்புத வரிகள்.
கல்வி கற்றவனை சான்றோன் என்று
உலகம் புகழ படிக்க வேண்டியது புத்தகங்களையே!
அக்காலத்தில் எழுத்தாணியும் ஓலைச்சுவடி யுமே வரலாறு.
இக்கால மனிதனின் விஞ்ஞான
முன்னேற்றம் படிப்பறிவினால் வந்ததே!
தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு.
ஒருவனைப் பார்த்து அவன் புத்தகப் புழு என்று
கேள்விப்பட்டிருக்கிறோம்.
நமது நினைவோடை ஓடிக்கொண்டே இருக்க
புத்தகம் தினம் தினம் படிப்பது மிக மிக அவசியமே!
தேங்கிவிட்டால் குப்பையாகிவிடும் நம் மனமும் அறிவும்.
புத்தகம் படிக்க தினமும்
ஒருமணி நேரத்தை பயன்படுத்தலாமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# பாதி

சிரிப்பினுள்
சிறு கண்ணீர்

கண்ணீர் கடந்தும்
ஒரு புன்னகை

இரு பாதியில்
புரியவில்லை

எப்பாதியில்
நானென்று



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# வாழ்க்கை என்பது சிறுவட்டம்



வாழ்க்கை என்பது சிறுவட்டம்
அதைச் சுற்றி வருவதே போராட்டம்
தடையின்றி போகும் நீரோட்டம்
இறுதியில் போவாய் நீ மட்டும்

காலையில் தொடர்வாய் உனது ஓட்டம்
காதில் கேட்கும் இசைப்பாட்டும்
உடலுக்குத் தெம்பு நல்ல ஆட்டம்
அதற்கு ஏற்ப பாடு பாட்டம்

ஊரின் ஒற்றுமைக்குத் தேவை தேரோட்டம்
உலகின் அழகிற்கு தேவை பூந்தோட்டம்
உரிமை வேண்டி போடு ஆர்ப்பாட்டம்
வெற்றி கிடைத்தால் உனக்கே கொண்டாட்டம்

நல்ல வழியில் தேடு தேட்டம்
பயன்பெற போடு நல்ல திட்டம்
உற்சாகமாய் இருந்தால் போகும் வாட்டம்
உன்னைத் தேடியே வரும் கூட்டம்

*தேட்டம் -செல்வம்
*நாட்டம் - பாடல்

கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# பூமித்தாயின் மடி

இயற்கையை வேட்டையாடும் மனிதனே

*மலை* வெறும் மலை அல்ல
பூமித்தாயின் மடியாய்
இயற்கை தந்தகொடை
என்பதை அறிவாயா.

மழை மேகத்தின் புகலிடமாய் அரவணைத்து
பச்சை பசுமையான மரங்களையும்
அதன்ஊடே உயிர்வாழ தூயகாற்று எனவும்
மழையையும் அருவியாய்
பூமிக்கு உயிர்தண்ணீரையும் விவசாயம் என்னும்
உயிர்தொழிலை வளமாக்கும்
*தாய்பாலுக்கு* இணையான நீருக்கு
ஆதாரமான மலை வெறும் மலையல்ல

*பூமித்தாயின்மடி* என்பதை உணர்ந்து
இனி ஒரு விதி செய்வோம்

இயற்கையை நேசிப்போம்
இயற்கையை காப்போம்
இயற்கையோடு ஒன்றிவாழ்வோம்.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

கடவுள்
*********

இல்லை என்பவருக்கு
விவாதப் பொருள்
இருக்கு என்பவருக்கு
இருப்பாய் இருப்பது

காட்சி
********

நனவில் காண்பது
கண்களுக்கு தெரிகிறது
கனவில் காண்பது
மனதிற்கு தெரிகிறது

கிறுக்கல்
*************

மழலையின் கைகள்
நடத்தும் வித்தை
மயக்கத்தில் மனிதனுக்கு
வரும் தடுமாற்றம்

கீழடி
*****""*

தெரியாத வரை
புதிராக இருந்தது
தெரிந்த பின்பு
வரலாறாக அறிந்தது

குறள்
*********

ஈரடியில் குறள் உலகை
வலம் வந்தது
சீரற்ற வாழ்க்கைக்கு
பாடம் தந்தது

கூடு
******

மரங்களில் கண்ட
பறவைகள் வாழ்விடம்
மனித வீடுகளில்
அலங்காரப் பொருள்

கெழுதகை
*************

உதவ மறுக்கும்
மனமுடையது அல்ல
உதவிடும் கரம்
கொடுக்கும் நட்பு

கேள்வன்
************


இதயம் கொடுக்கும்
துணைவனாய் வேண்டாம்
தோள் கொடுக்கும்
தோழனாய் இருந்திடு
(கேள்வன்-கணவன்)

கைம்பெண்
***************

ஒதுக்கி வைத்த
காலம் மாறியது
ஒன்றிணைத்து செல்வது
வழக்கமாய் போனது

கொடை
***********

இருப்பதை பகிர்ந்து
இன்பம் கண்டிடு
இருக்கும் வெறுப்பும்
விருப்பம் கண்டிடும்




கோலம்
***********

புள்ளிகள் தவறிட
அலங்கோலம் வரும்
சரியாய் இருந்திட
அழகுடன் மிளிரும்

கௌளி
**********

துணை தேட
சத்தமிட்டு அழைக்கும்
நிமித்தம் உரைத்ததாய்
நம்பும் மானுடம்

*கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு*

# வலிகளை ஏற்றுக்கொள்

பட்டை தீட்டாத வரை
வைரம் கூட
கரி கட்டை தான்

துளை இடப்படாத
புல்லாங்குழல்
வெறும் மூங்கிலே

செதுக்கப்படாதவரை
சிலைகள் கூட
வெறும் கற்களே

மண்ணோடு மண்ணாக
தங்கம் இருந்து
என்ன பயன்?



வாழ்வில் வலிகளை
ஏற்றுக் கொள்ளுங்கள்
வாழ்வதற்கான வழிகள்
வந்து கொண்டே இருக்கும்

மெருகேற்றப்படுவாய்
பக்குவம் அடைவாய்
கடந்த கால வலிகளை எல்லாம்
கடைவாய் புன்னகையில்
கடந்து விடுவாய்

நீ யார் என்பது
நீயே உணரும் போது
வைரத்தை விட
வலிமையாவாய்

கல்லடிப் பட்டாலும்
கனிகளைத் தரும்
மரம் ஆவாய்

காயங்களை ஒதுக்கி
வரப்பாக்கி விடு
கலகத்தை எல்லாம்
களைகளாய் பிடுங்கி விடு
அனுபவங்களைக் கொண்டு
பண்படுத்தி விடு
ஏனென்றால்
உழுத நிலத்திற்கு தான்
விளைச்சல் அதிகம்!

கவிஞர் சி முத்துராசன், அரியலூர்

# பேனா

விரலுக்குள் அகப்படும் போது
எண்ணவோட்டங்களுக்கேற்ப மாறி
வார்த்தைகளைக் கோர்க்கும்

பேனா முனை கத்தி முனையைவிட கூறானாது
மனதை வசிகரிக்கவும் முடியும்
வரிவரியாய் கீறலிட்டு குத்தி கிலிக்கவும் முடியும்
உண்மைகளையும் உயர்த்திடும்
பொய்மைகளையும் உயர்த்திட முடியும்
எழுதும் மனிதனுக்கு சிறந்ததோர்
உற்ற தோழனாகி தொற்றிக்கொள்ளும் தினந்தோறும்
பிரிவே இல்லாது சட்டைப்பையில் தொத்திக்கொள்ளும்

பேனாவே நீ எனது நண்பனே
எனது எண்ணங்களை வசிகரித்திட எழுதுவாய்
என் விரல்களுக்குள் ஓர் விரலாய் நின்று

வெற்று தாளில் விலாசி மேய்வாய்
துரிதமாய் தினமுமே உன்னைப்போலில்லை
யாவருமே நட்புகென நேரமிடத்தானே

உன்னை பிடித்து விடும் போது
எண்ணமெல்லாம் சுதந்திர விடுதலைப்பெற்று விடும்
காணுவதெல்லாம் கட்சிதமாய் வரிகளாகிடும்.

எண்ணெழுத்தெல்லாம் பொன்னெழுத்தாகிடதான் ஆசை
வெண்கற்கலைப்போல வெளுத்து விட மலர்ந்து விட வேண்டும்.
பேனா முனையில் செதுக்கிட வேண்டும்.

கவிஞர் சஹீனாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# என்னுடனே நீ

உன்னை சந்திக்கின்ற நாட்களில்
உன்னை காதலிக்கிறேன்
உன்னை சந்திக்க முடியாத நாட்களில்
உன் நினைவுகளை காதலிக்கிறேன்

ஏதோ ஒரு வகையில்
என்னுடனே நீ இருப்பதாய்
எண்ணிக்கொள்வதால்
எப்பொழுதும் உன்னை
காதலிக்கின்றேன்
நீ என்னை காதலிக்கின்றாயா
என்று கூட தெரிந்துகொள்ள விரும்பாமல்.



கவிஞர் இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# அனுபவம்

வெகு தூர பயணத்தில்
வேகம் குறைந்து,
தாகம் தணிந்து,
முற்றுப்புள்ளி வைக்கும் தருவாயில்
முழு வாழ்வியலும் புரிகிறது,
அவை முதிர்ந்த ஒருவனின்
புலம்பலில் தெரிகிறது.



கவிஞர் ஞா. மணிமாறன், இரெட்டியூர்

# பூவுக்குள் பூவை

விடியல்கள் ஒவ்வொன்றும்
விநோதம் தானன்றோ - அவை
பூவினங்கள் மாறும்
பருவங்கள் போன்றன்றோ - நம்
பூவையர் பருவம் போலன்றோ!

மலரோடு தொடரும்
அலரைத்தானே அனைவர்
மனமும் மணந்து
மகிழ விரும்பும் மெய்யன்றோ! - நம்
மாதர் வாழ்வின் படிகளன்றோ!

மலரத் துடித்து தலைநிமிர்ந்து
"அரும்பாய்க்" குவியும் நிலையது
மலரின் முதல்நிலையன்றோ - அது
பெண்ணின் பருவம்
பேதையெனும் நிலையன்றோ!

குவிந்த அரும்பு வீங்கிச்
சற்றே பெரிதானால் நாம்
காணும் எழில்தான்
பெதும்பை போன்றன்றோ - அது
"மொக்கு" எனும் நிலையன்றோ!



நாளிரண்டு கடந்தால்
நறுமுகையென நீண்டு
முகிழ்க்கும் நிலைதான்
மங்கையர் பருவமன்றோ - இந்நிலை
"மொட்டு எனப்பெயரன்றோ!

பூவிதழ் விரிந்து நம்
பூவையரைக்கவரும்
நான்காம் நிலைதான்
நம் மடந்தைப் பருவமன்றோ.
நறுமண "மலர்"அன்றோ!

அதனைத்தொடரும் அழகிய பூவின்
ஐந்தாம் பருவம் -நம்
அரிவையரின் தொடர்
தெரிவையரின் அழகன்றோ! - அது
"அலர்"எனும் அழகன்றோ!

வாடிவதங்கி வாழ்ந்தது போதும்
பேரிளம்பெண் நிலை தாண்டி
வீழும் நிலைவரின் - அது
"வீ"யெனும் நிலையன்றோ - அது
தெரிவை தாண்டிய நிலைன்றோ!

விடியலின் மாற்றம்
வீயின் தொடர்ச்சி
இறுதிப்பரிணாமம் - நம்
முதுமையின் உச்சம் - அது
"செம்மல்"நிலை தானன்றோ!

விடியல்கள் ஒவ்வொன்றும்
விநோதம் தானன்றோ!
பூவினங்களின்
பருவங்கள் போன்றன்றோ! - நம்
பாவையர் பருவமும் அதுவன்றோ!

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷ்

# அகர முதல இலக்கியப் பேரவை

# அரங்கேற்றம்

அரங்கேற்றம் அனுபவத்தின்
அழகான ஆரம்பம்

ஆரம்பம் காலத்தே
அமைவதே பேரின்பம்

பேரின்பம் பெறுவதுவே
கலைஞனின் பெருவிருப்பம்

பெருவிருப்பம் நிறைவேற
வேண்டும் பேரார்வம்

பேரார்வம் தந்திடுமே
எல்லையில்லா பெருமுயற்சி

பெருமுயற்சி நல்கிடுமே
நல்வாய்ப்பாய் அரங்கேற்றம்



கவிஞர் திரு. ராமச்சந்திரன், அருப்புக்கோட்டை

# கவிதை மூலமே

தெள்ளத்தெளிந்த தமிழை
தெரிந்துரைப்பது என் கவிதை மூலம்.

உள்ளடக்கிய உணர்வுகளை
உற்சாகமாக உணர்த்துவது என் கவி மூலம்.

எண்ணிலடங்கா ஏக்கங்களை
எழுத்தின் மூலம் தீட்டுவது என் கவி மூலம்.

வித்திட்ட வார்த்தை விண்ணுலகம் வரை
வீறிட்டு செல்வது என் கவி மூலம்.

சிந்தனைச்சிறகில் சிறப்பாய் பயணித்தாலும்
சீற்றமாய் எண்ணங்கள் எழுத்தாய் அமைவது
என் கவிதை மூலமே!



கவிஞர் பானு அபீதுல்லா

# நட்பின் மகிமை

அரும்பு வயதில் குறும்புகள் உண்டு
ஆலம்விழுதில் தொங்கியது கண்டு
இவர்களை போல் எவர் உண்டு
ஈடில்லா மகிழ்ச்சியில் திளைத்து
உடன் இருப்பவர் வியந்தது கண்டு
ஊக்கம் தரும் நினைவுகள் உண்டு
எண்ணில் உன் பெருமை கண்டு
ஏகாந்த பொழுதுகள் பல உண்டு
ஐராவதத்தின் பலம் கண்டு
ஒற்றுமையில் விளையாடியது உண்டு
ஓங்கி வளரும் நம் நட்பு கண்டு
ஔடதமாய் திகழ்வோம் என்று
அஃதே வாழ்த்தும் உள்ளமும் உண்டு
இரட்டையராய் பிறக்கவில்லை இனி
இருவரும் ஒருவரானோம் என்று
உண்மையில் உயிரானோம் இன்று
நட்புக்கு உயிர் தரும் இன்னொரு கர்ணனும் இவனே என்று
உண்மையில் உயிரானோம் இன்று
காலம் சொல்லும் நம் நட்பின் பெருமை கண்டு.
உலகமே வியக்கும் நம்மை கண்டு.



கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# ஆடியிலே சேதிசொல்ல!

பெண்மையெனும் சக்திக்குப் பெருமை சேர்த்து
பண்டிகைகளை அழைக்கின்ற மாதமாம்  ஆடிமாதம்!
அன்னை காமாட்சி தவமிருந்து ஈசனை அடைந்த மாதம்!
ஆடிக் காற்றில் அம்மியும் பறக்குமென்பர்!
காற்றில் பறக்கின்ற தூசுகளும் கிருமிகளும்
தொற்றினை உண்டாக்கி நோய்பரப்பும் என்பதனால்
ஆடிமாதத்தில் அம்மனுக்குக் கூழூற்றி, வேப்பிலை
ஆடையினை தரித்தடுவர் ! விரட்டிடுவர் நோய்களையே!
கதிரவன் தெற்குநோக்கிப் பயணிக்கும் காலமிது!
ஆதவன் சூட்சுமக் கதிர்களை  வெளிப்படுத்தும்
ஆடிப் பட்டத்தைத்  தேடிவிதை என்பார்கள்!
ஆடிப் பதினெட்டில் பெருகிவரும் காவிரியை
ஓடிவந்து பூசைசெய்து உழவர்கள் வேண்டிநிற்பர்!
அரங்கனைக் கரம்பற்றிய ஆண்டாள் அவதரித்த
ஆடிப்பூரத் திருவிழா வைணவ ஆலயங்களில்!
அகிலமாதா பார்வதி  ருதுவான தினமிதுவே!
ஆடி செவ்வாயைத் தேடிக் குளியென்பர்!
மணமான பெண்கள் மஞ்சள்பூசி நீராட
மாங்கல்ய பலம்கூடும்!  வேண்டிடும் கன்னியர்க்கு
மணவாழ்வு நன்கமையும்! வாராஹி நவராத்திரியைக்
கொண்டாடும் மாதமிது! ஆடி வெள்ளிதனில்
அம்மனின்  அருட்பார்வை துன்பங்களை விரட்டிடுமே!
சந்நியாசிகள் சதுர்மாஸ்ய விரதம் மேற்கொள்வர் !
ஆடிமாத முதல்நாளே ஆடிப் பண்டிகையாம்!
ஆடிப்பால் குடிக்காத மாப்பிள்ளையை தேடிப்
பிடியென்பர்! புதுமணத் தம்பதிக்கு சீர்தருவர்!
புதுமணத் தம்பதியர் பிரிந்திருப்பர் ஆடியிலே!
முன்னோரின் அருள்பெறவே ஆடி அமாவாசை
தினத்தன்று தர்ப்பணங்கள்! புனித நீராடல்கள்!
ஆடிக் கிருத்திகை முருகனுக்கு உகந்ததினம்!
பாம்பணையில் மகாவிஷ்ணு பள்ளிகொண்ட நாளாக
ஆடிமாத  வளர்பிறை எகாதசி அமைகிறதே!!
காவடிகளைச்  சுமந்து விட்டல நாமத்தைப்
பாடியே வணங்கிடுவர் பண்டரிபுர நாதனையே!
ஆடித் தள்ளுபடியை அளித்திடுவர் வணிகர்கள்!
ஆடிமாத சேதிசொன்னேன் அனைவரும் பயனடைய!




கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# மாலவனும் வைணவமும் (பகுதி 39)

## நாச்சியார் திருமொழி 01 — ஆண்டாள் தொடர்ச்சி 09

ஆண்டாளோ அஞ்சுகுடிக் கொருசந்ததி! ஆழ்வார்கள்
தம்செயலை விஞ்சிநிற்கும் தன்மையள்! பிஞ்சினிலே
பழுத்தவளே! ஆழ்வார்கள் குடிதனக்கு ஒரேவாரிசு!
வளர்த்திட்ட பெரியாழ்வார் போலாண்டாள் எம்பெருமாள்
நல்மங்களா சாசனமும் மற்றாழ்வார் போலவளும்
பக்திநிலை உற்றாளே! திருத்துழாய் முளைக்குங்கால்
பரிமளித்தல் போன்றதுவாய் பச்சிளமையில் பேரறிவினள்!
ஐந்துவயதில் திருப்பாவை முப்பதினையும் பாடியளித்தாள்!
நாச்சியார்தம் திருமொழியில் எம்பெருமாள் சேர்க்கைக்கே
உருகிநின்றாள்! திருப்பாவை முப்பதாலும் திருமால்தான்
கைக்கொளாததால் ஆசையது முற்றியதால் மாண்நாச்சியார்
திருமொழியை யாத்திட்டார்! பெரியாழ்வார் அடிப்பணிவை
உணர்த்துவகை தன்னையவள் பதிகமுடிவில் விட்டுசித்தன்
பட்டர்பிரான் கோதையென உணர்த்தினளே! தந்தையாய்
வளர்த்தவரே ஆசாரியன் ஆனாரே!ஆசார்ய பக்திதனை
உணர்த்தினளே! பூமிப்பிராட்டி அவளென்பதால் எம்பெருமான்
தொடர்பதனை மெய்ப்பித்தாள்! ஆண்டாள்தான் நாச்சியாரே!
பாவையது மார்கழிக்கும் திருமொழியோ தைதனக்கும்
உரியதுவாய் அமைத்தனளே! பாசுரங்கள் பாவைதனில்
மூன்றுபத்தும் திருமொழியில் ஒருநூற்று நாற்பத்து
மூன்றளவும் யாத்தளித்தாள்! குளிர்கால மாதங்கள்
அடிப்படையே! வளர்த்ததாதை பெரியாழ்வார் தம்மைவிட
ஆண்டாளே பெருமாள்மேல் பரிவினளாய் சாற்றினாரே!
பக்தியினை காதல்வகை வைத்தனளே! பெருமாளே
நாயகனாய் ஆழ்வார்கள் பக்தரெலாம் நாயகியாய்
காதற்சுவை கூட்டினளே! கோதைதமிழ் பாதகங்கள்
தீர்த்திடுமே! பரமனடி காட்டிடுமே! வேதங்களின்
வித்தாகும்! பூவாலும் பாவாலும் கண்ணனுக்கு
மாலைதனை சூட்டினளே! மானுடரை மணக்காது
அரங்கனுக்கே வயப்பட்டாள்! சீர்த்தியெலாம் காண்போமே!



கவிஞர் கணக்காயர் (இ. சே. இராமன்)

# காலம் தந்த வலி

ஆற்றுடன் போட்டி போட்டு விடலாம்
ஆளபிறந்த மனிதனிடம் போட முடியவில்லை
பொறாமை என்னும் போக்கும்
பணம் என்னும் பாகுபாடும்

பிரித்து வைத்தது மனிதனின் மனநிலையை
ஏற்றத்தாழ்வு என்ற நிலையில்
தினம் தினம் குருதி களம் பசியின் போக்கில்
பல லட்சம் உயிர்கள்



பல லட்சம் செலவில் ஓர் உயிர் தினம்
உல்லாசம் ஊர் உலகம்
இது ஆண்டவன் விதி அல்ல
மனிதனின் மதி

சமூகத்தின் கொடுமைகள்
கொற்றவையின் தாக்கத்தை விட
பெரும் குற்றமே மனிதனின் தாக்கம்

புரிந்து கொள்ளாத மானிடப் பிறவியில்
ஏன் பிறந்தோம் என்ற நிலை பலரும்?

மானிடா நீயும் மரணிப்பது உறுதி என்பது
மறந்து விட்டாயோ உன் ஆதிக்கத்தின் தருணத்தில்

காலம் வழி விடும் கலிகாலமும்
கண்ணீர் விடும் பூமியும்
உயிர் இல்லாமல் அன்று
புரிந்து நடப்போம்
பணிந்து செல்வோம்
எதுவும் பயனில்லா உலகில்.

கவிஞர் ம. செல்லமுத்து, நூர்த்தப்பூர்

# வேட்கை

தோல்வி கண்டு துவளாதே
உலகமே உன்னை ஒதுக்கினாலும்
உறுதியை என்றும் விடாதே
வாழும் வாழ்க்கை அற்பமானது
காலத்தை வீணடித்து விடாதே
உள்ளுக்குள் வீரத்தை விதைத்திடு
அகத்தில் அழுக்குகளை நீக்கிவிடு
வாழும் வாழ்வை மதித்திடு
பின்னேறிட ஆயிரம் கதைகள்
உலகமே சொல்லித் தந்திடும்
முன்னேறிட ஒருவார்த்தையே போதும்
ஊக்குவிக்க யாரும் இல்லை
முன்னேறிட வாய்ப்பும் இல்லை
தோல்வி கண்டு துவளாதே
வெற்றிப்பாதை நோக்கி ஓடிவிடு
வெற்றியே என வேட்கைகொள்
ஆயிரம் இடர்கள் சூழ்ந்துவிடும்
உள்ளம் நிம்மதி இழந்துவிடும்
ஆனாலும் வெற்றிக்கு முதல்படி
முன்னேற்றம் உனக்கு முன்னே
ஓடி விடு வேட்கையோடு
உன் இலட்சியம் நோக்கியே
காலம் தாழ்த்தி விடாதே
உன்மேல் நம்பிக்கை வைத்திடு
உன்னை நீயே நம்பிவிடு
ஆசைகளோடு இலட்சியம் நோக்கியே
பயணப்பாதையை அமைத்து விடு
வாழ்வே இன்பம் பொங்கிட
நீயோ பொங்கி எழுந்துவிடு
வேட்கையோடு துணிந்து எழுந்துவிடு



கவிஞர் எச். டீ. எச் பஸீறதா, கொழும்பு

## நூல் அனுபவம்

## புதுக்கவிதைகளின் பூங்கா

என் கவிதைகளை வாசிப்பதற்காக, என் "உன்னைத் தேடு" (புதுக்கவிதைகளின் பூங்கா) என்னும் கவிதை
நூலைத் தேடிய அன்பு வாசகருக்கு, என் கனவுகளைத் தேடிய நேசத்திற்கு,




தமிழ் இலக்கிய வரலாற்றிலே புதுக்கவிதைகள் தனக்கென தனியிடம் பிடித்துள்ளன. புதுக்கவிதை முன்னோடிகள் பலர் பல கவிதைகளை நமக்கு அளித்துள்ளனர். அவர்கள் வழி நாமும் கவிதைகள் படைப்போம்.

புதுக்கவிதைகள் எளிய மொழி நடையிலுள்ளதால் அனைவராலும் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். நவீன தமிழ் இலக்கியத்தின் சிறப்புக்குச் சான்றாக புதுக்கவிதைகள் விளங்குகின்றன.

புதுக்கவிதை வழிப் பல கவிதை முன்னோடிகள் வளர்ச்சி அடைந்தனர். சுருக்கம் கொண்டதனால் எழுதுவது இலகுவாகும். பேச்சுவழக்குச் சொற்கள், ஒலிநயம் காணப்படுவது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

வடமொழி, ஆங்கிலம், பேச்சு வழக்கு சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு கருப்பொருளைக் காட்சியாகக் கொண்டு நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தக் கூடியதாய் புதுக்கவிதைகள் சிறப்பு பெறுகின்றன.

கவிஞர் ஸ்ரீ




ஆதியில் தொடங்கி
அந்தத்தில் முடிக்க
வந்த அரும்
பெரும் கவியே
அற்புதக் கவிச்சுடரே

பா இயற்றும்
கவி பாவலரே
கவியமுதே வருக

தேமதுர சுவையினில்
கவிதை சிந்திய
கவிமாமணி வருக

கவிக்களம் பல
கண்ட கவிக்
கனியே வருக

அகமகிழ்ந்தே அன்பினில்
நன்றி பகர்ந்தேன்

எந்தன் போற்றுதலுக்குரிய
கவிச்சுடரே வாழ்த்துகிறேன்.

கவி முத்துக்குவியல் கவிச்சோலை குழுமம்

கவிஞர் ஸ்ரீ

# பம்மல் சம்பந்த முதலியார்

## கட்டுரை



பம்மல் சம்பந்த முதலியார், தாமே நாடகங்களை எழுதி, நடிக்கச் செய்து, சமுதாய சீர்திருத்தக் கருத்துகளை மக்களுக்கு எடுத்துரைத்தவர். தமிழ் நாடக உலகம் "நாடகத் தந்தை" என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

பம்மல் சம்பந்த முதலியார் 01.2.1873ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் பம்மல் விஜயரங்க முதலியார் - மாணிக்க வேலு அம்மாள். பம்மல் என்பது இவரது ஊர்ப் பெயர்

இவர் தந்தை வேதரங்கம் முதலியார் தமிழ் ஆசிரியராக இருந்த காரணமாக வீட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை,ஆர்வமுடன் படித்து வந்தார்.

கோவிந்தப்ப நாயக்கர் உயர்நிலைப் பள்ளி, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, மாநிலக் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் கல்வி பயின்றார். சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரான இவர் 1924 முதல் 1928 வரை நீதிமன்றத் தலைவராகவும் பணி செய்தார்.

தமிழ் நாடகப் போக்கில் இழிந்த நிலையைக் கண்டு நண்பர்கள் சிலருடன் சென்னை ஜார்ஜ் டவுனில், 1891 ஜூலை 1 ஆம் நாள், "சுகுண விலாச சபை" என்ற நாடகக் குழுவை உருவாக்கினார். லீலாவதி சுலோசனா - நாடகம் உரைநடையில் தமிழில் முதன் முதலாக அச்சிடப்பட்ட நாடகம் ஆகும். நாடகம் என்றால் தெருக்கூத்து என்ற நிலையை மாற்றி, நகரங்களிலே நல்ல மேடையமைத்து, பல வகை நாடகங்களை நடத்திக் காட்டினார்.

உயர்குடியில் பிறந்தவர்களையும், கற்றவர்களையும், அறிஞர்களையும், சம்பந்தம் தம்முடைய நாடகங்களில் நடிக்கச் செய்தார். இவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சர். சி.பி.ராமஸ்வாமி அய்யர், எஸ்.சத்தியமூர்த்தி, எம்.கந்தசாமி முதலியார் (எம். கே. ராதாவின் தந்தை), சர். ஆர்.கே. ஷண்முகம் செட்டியார், வி.வி.ஸ்ரீனிவாச அய்யங்கார், வி.சி.கோபாலரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அ வில்சன் இதழாசிரியர்

நாடகக் கலைக்குத் தம் 81வது வயது வரை பெரும்பணி ஆற்றினார். கண்பார்வை மங்கிய நிலையிலும் தாம் சொல்லியே பிறரை எழுத வைத்தார். மொத்தம் 80 நாடகங்கள் எழுதினார்.

1959 இல் சங்கீத நாடக அகாதமி விருது, 1916 இல் நாடகப் பேராசிரியர் என்ற விருது, 1959 இல் பத்மபூஷண் என்ற பட்டத்தையும் பெற்றார்.
தன் நாடகங்களில் சிலவற்றில் செய்யுள், கீர்த்தனை முதலியவற்றையும் அறிமுகப்படுத்தினார். தமிழில் ஷேக்ஸ்பியர் ஆங்கில நாடகங்களை அவைகளின் சுவையோ நயமோ குறையாமல் தமிழ் நாடகங்களாக மொழிபெயர்த்தார்.

பம்மல் சம்பந்த முதலியாரின் பல நாடகங்கள் திரைப்படங்களாக்கப் பட்டுள்ளன.

1. காலவா ரிஷி (1932)
2. சதி சுலோச்சனா (1934, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
3. மனோகரா (1936, கதை, வசனம், இயக்கம், நடிப்பு)
4. ரத்னாவளி (1935)
5. யயாதி (1938)
6. ராமலிங்க சுவாமிகள் (1939)
7. சந்திரஹரி (1941)
8. ஊர்வசி சாகசம் (1940)
9. தாசிப் பெண் (1943)
10. சபாபதி (1941)
11. வேதாள உலகம் (1948)




பம்மல் சம்பந்த முதலியார் இயற்றி, தமிழ் நாட்டரசு நாட்டுடைமையாக்கி யுள்ளனர் பட்டியல்.

- இந்தியனும்-ஹிட்லரும்
- இல்லறமும் துறவறமும்
- என் சுயசரிதை
- என் தந்தை தாயர்
- ஒன்பது குட்டி நாடகங்கள்
- ஓர் விருந்து (அ) சபாபதி நான்காம் பாகம்
- கலையோ-காதலோ? அல்லது நட்சத்திரங்களின் காதல்
- கள்வர் தலைவன்
- காதலர் கண்கள்
- காலக் குறிப்புகள்
- குறமகள், வைகுண்ட முதலியார் (இரு நாடகங்கள், 1934)
- சபாபதி
- சபாபதி முதலியாரும்-பேசும் படமும்
- நான் குற்றவாளி
- சாதாரண உணவுப் பொருள்களின் குணங்கள்
- தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (முதல் பாகம்)

அ வில்சன்
இதழாசிரியர்

|| தமிழ் அன்னை பிறந்து வளர்ந்த கதை (இரண்டாம் பாகம்)
|| தீபாவளி வரிசை || தீயின் சிறு திவலை
|| நாடகத் தமிழ் || நான் கண்ட நாடகக் கலைஞர்கள்
|| நீண்ட ஆயுளும் தேக ஆரோக்யமும்
|| பலவகை பூங்கொத்து || மனை ஆட்சி || மனோகரா
மூன்று நகைச்சுவை நாடகங்கள்
|| யயாதி || வாணீபுர வணிகன் || விடுதிப் புஷ்பங்கள்

92 ஆண்டுக் காலம் நிறை வாழ்வு வாழ்ந்த சம்பந்த முதலியார் 24.09.1964 ஆம் ஆண்டு மறைந்தார்.




நாளை
நமதே
விட்டுவிடாதீர்கள்.
ஆரம்பம் எப்போதும்
கடினமானது.
அகர முதல இலக்கியப் பேரவை
Aagaramuthalaa
www.aagaramuthala.com
aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com